செய்திக் குறிப்பு

dt: 07.02.2018

மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையை சார்ந்த டாக்டர். சலில் வேமுலா தலைமையில் ஒரு குழுவினர் இன்று காரைக்கால் வந்துள்ளார்கள். இக்குழு மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்தித்து ஆலோசனை நடத்திய பிறகு. மாவட்ட ஆட்சியர் அவர்களுடன் எமரால்டு பீச் மற்றும் கடற்கரை சீகல்ஸ் பின்புறம் உள்ள கடற்கரையையும் ஆய்வு செய்தார்கள். இது சம்பந்தமாக ஆட்சியர் அலுவலகத்தில் சிறிய ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது. இக்குழு வந்ததின் நோக்கம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு இடத்தில் "நீலக்கொடி கடற்கரை" அமைப்பதின் நோக்கம் தான் ஆகும். புதுவையில் கடற்கரை சிறப்பாக இருப்பதால் இக்குழு காரைக்காலை தேர்ந்தெடுத்து ஆய்வு செய்தார்கள். பிறகு Soil Test மண் பரிசோதனை செய்து இவர்கள் மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். இந்த அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு பணிகள் தொடங்கும் என கூறினார்கள். சர்வதேச தரம் வாய்ந்த இந்த நீலக்கொடி கடற்கரையில் இருப்பதற்கு பாதுகாப்பு. மற்றும் சுத்தமான கழிவறை, உடை மாற்றும் அறை. பொதுமக்கள் அமரும் இடம். குடிநீர் வசதி போன்றவை ஆகும், மேலும் தொழிற்சாலை மற்றும் இதர கழிவுநீர்கள் நேரடியாக கடலில் கலக்கக் கூடாது என்றும் மேலும் கடல் அரிப்பு இருக்கக் கூடாது என்றும் கூறிய குழுவின் தலைவர் அவர்கள் கடற்கரையில் பாலைப்புக் பொருட்களை கண்டிப்பாக

கு

தடைசெய்யப்படும் என்றும் அருகில பசுமையான மரங்கள் அதிகம் வைக்க வேண்டும் எனவும் கூறிய அவர்கள். அவசர சிகிச்சை மற்றும் முதலுதவி அறைகள் கண்டிப்பாக அமைக்க வேண்டும் எனவும் கூறினார்கள். மேலும் யோகா செய்வதற்கு போதுமான இடம், உடற்பயிற்சி மேற்கொள்ள போதுமான இடம் ஆகியவை இடம்பெற வேண்டும் என்றும் சிறு விளையாட்டு மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஆகியவை இருக்க வேண்டும் என்றும் இதற்கு ஒரு "Beach managment Comittee" என்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைத்து இவை அனைத்தும் ஆய்வு செய்ய வேண்டும் எனவும் கூறினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன். இ.ஆ.ப. சார் ஆட்சியர் திரு. A. விக்ராந்த் ராஜா. இ.ஆ.ப. மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை-தலைவர்கள் கலந்து கொண்டனர்.

7/2/18